**செய்தி வெளியீடு எண்:216** **நாள்: 19.04.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்திற்காக பாக் வளைகுடாவின் பாரம்பரிய மீன்பிடி பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபடும் போது இலங்கை கடற்படையினரின் தொடர் கைது நடவடிக்கைகளுக்கு ஆளாகின்றனர். இக்கைது நடவடிக்கைகளின் போது தமிழக மீனவர்கள் அவர்களது படகுகளுடன் கைது செய்யப்பட்டு இலங்கையில் சிறையிடப்படுகின்றனர். தமிழக மீனவர்களின் படகுகள் இலங்கையில் நீண்டக்காலத்திற்கு முடக்கிவைக்கப்படுகின்றன. இவ்வாறான நிகழ்வுகளின்போது மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் மேற்கொள்ளப்பட்ட இடையறாத தொடர் நடவடிக்கைகளின் பயனாக, பல்வேறு நிகழ்வுகளில் இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு தமிழகம் திரும்பியுள்ளனர். 2014 ஆண்டில் தமிழக மீனவர்களது 80 படகுகள் மட்டும் விடுவிக்கப்படாமல் இலங்கை வசம் இருந்தது.

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழக மீனவர்களின் 80 மீன்பிடிப்படகுகள் நீண்ட நாட்களாக இலங்கையில் முடக்கிவைக்கப்பட்டுள்ளதை பல முறை கடிதங்களின் வாயிலாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்கள். மேலும், தமிழக மீனவர்களின் படகுகளை நீண்ட நாட்களாக முடக்கிவைத்திருக்கும் இலங்கை அரசின் நடவடிக்கை, மீனவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரத்தினை முடக்குவதாக அமைந்துள்ளது என்பதையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்கள். மேலும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தனிப்பட்ட முறையில் இவ்விடயத்தில் தலையிட்டு இலங்கை அரசின் வசமுள்ள மீன்பிடி படகுகளை விடுவித்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி வந்தார்கள்.

இவ்வாறு தமிழக அரசு மேற்கொண்ட இடைவிடாத மற்றும் தொடர் நடவடிக்கைகளின் பயனாக தமிழக மீனவர்களின் 80 மீன்பிடி படகுகளும் விடுவிக்கப்பட்டன. விடுவிக்கப்பட்ட 80 படகுகளில் குறைந்தளவு சேதமடைந்த 64 படகுகள் மீட்பு குழுக்களால் பழுது நீக்கப்பட்டு தமிழகத்திற்கு கொண்டு வரப்பட்டன. மேற்படி மீட்புப்பணிக்கு சென்ற படகுகள் மற்றும் மீட்கப்பட்டுள்ள படகுகளுக்கு தேவையான எரியெண்ணெய், உயவு எண்ணெய் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

மீட்புக்குழுவில் சென்ற மீனவர்களுக்கான உணவு மற்றும் படகு பழுது நீக்க செலவினம் ஆகியவற்றையும் தமிழக அரசே ஏற்றுக் கொண்டது. இலங்கையின் தலைமன்னார், காங்கேசன்துறை மற்றும் தலைமன்னார் பகுதியில் இருந்த 18 படகுகள் முற்றிலுமாக சேதமடைந்து, இலங்கை கடற்பரப்பில் மூழ்கிவிட்டன.

இவ்வாறாக இலங்கை கடற்படையின் கைது நடவடிக்கைக்கு ஆளாகி, மீட்க இயலா வண்ணம் கடலில் மூழ்கிய இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 18 படகுகளை இழந்த 18 மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டமையால், அம்மீனவர்களின் துயரத்தினை போக்கிடும் வகையில், அவர்களுக்கு நிவாரண உதவித் தொகையாக தலா ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.90 இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் ஆணையிடப்பட்டு, இன்று (19.04.2017) தலைமைச் செயலகத்தில் அதற்கான காசோலைகளை 18 மீனவ பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமிருந்து நிவாரண உதவித் தொகைக்கான காசோலைகளை பெற்றுக் கொண்ட மீனவக் குடும்பத்தினர், தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன் வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம்.மணிகண்டன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அன்வர்ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் (கூடுதல் பொறுப்பு) திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மீன்வளத் துறை ஆணையர் திருமதி பீலா ராஜேஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை –9.**
**நாள்: 19.4.2017**